ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/83 - 2023 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.12.22

*2363/83 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை சுகாதாரச் சேவையின் மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பு**

6 ஆவது திருத்தம்

*2014, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதிய மற்றும் 1883/17 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட, கீழே பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பானது கீழே பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2023, திசெம்பர் 15.*

**பகுதி** I

*திருத்த இலக்கம் 01 - 2016, சனவரி மாதம் 18 ஆந் திகதிய மற்றும் 1950/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 02 - 2016, ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய மற்றும் 1981/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 03 - 2016, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 1996/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 04 - 2021, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 2218/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*திருத்த இலக்கம் 05 - 2022, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய மற்றும் 2277/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

1A - G 41094 — 07 (2023/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**குறிப்பு** :

*2014, ஒற்றோபர் 11 ஆந் திகதிய மற்றும் 1883/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட, இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தியமைக்கையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருத்த இலக்கம் 01 உள்ளடக்கப்படாமையினால் திருத்தியமைக்கப்பட்ட வர்த்தமானப் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்த இலக்கங்கள் மேற்குறித்தவாறு திருத்தியமைக்கப்படுகின்றன.*

**பகுதி** II

*7.2 அ 2 மற்றும் 7.2 அ 5 எனும் உப பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன :*

*7.2 அ 2. ஆட்சேர்ப்பிற்கான கல்வி மற்றும் தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம் :*

*இலங்கை மருத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது ஏதேனுமோர் உள்நாட்டு மருத்துவக் கல்லூரியில் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றின் மருத்துவ பீடத்தில் மருத்துவப் பட்டம் பெற்று இலங்கை மருத்துவச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வைத்தியசாலையொன்றில் ஒரு வருட கட்டாய உள்ளகப் பயிற்சியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் மருத்துவராகச் சேவையாற்றும் பொருட்டு இலங்கை மருத்துவச் சபையில் முழுமையான பதிவினைப் பெற்றுள்ள மருத்துவப் பட்டதாரிகள் ஆட்சேர்ப்பிற்கான தகைமைகளைப் பெறுவார்கள்.*

**குறிப்பு** I : *1988, நவெம்பர் 01 ஆந் திகதியின் பின்னர் வெளிநாட்டு மருத்துவப் பட்டமொன்றினைப் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகள் மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 29.1* (b) (II) (cc) *மற்றும் 29.2* (b) (III) *இன் கீழ் விசேட பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை மருத்துவச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வைத்தியசாலையொன்றில் ஒரு வருட கட்டாய உள்ளகப் பயிற்சியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

*7.2 அ 5. ஆட்சேர்ப்பு, விண்ணப்பங்கள் கோரல் மற்றும் தெரிவுசெய்யும் முறை :*

*திணைக்களச் சுற்றுநிருபமொன்றின் மூலம் மற்றும் அரச வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுகின்ற பகிரங்க அறிவித்தலின் மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும். அதற்கமைய நியமனங்களுக்கான முன்னுரிமையானது பின்வருமாறு கருத்திற்கொள்ளப்படும்.*

1. *அரச பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரிகள் ;*
2. *இலங்கை மருத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய ஏதேனுமோர் உள்நாட்டு மருத்துவக் கல்லூரியின் மருத்துவப் பட்டதாரிகள் ;*
3. *மருத்துவச் சேவைகள் கட்டளைச் சட்டத்தின் 29.1* (b) (II) (cc) *மற்றும் 29.2* (b) (III) *ஆம் பிரிவுகளின் கீழ் விசேட பரீட்சையுடன் தகைமைகளைக் கொண்டுள்ள வெளிநாட்டு பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரிகள்.*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற அரச பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் திறமை ஒழுங்கு அடிப்படை, கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகப் பட்டதாரிகள் மற்றும் ஏனைய உள்நாட்டு மருத்துவக் கல்லூரிகளின் பட்டதாரிகளின் திறமை ஒழுங்கு அடிப்படை மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தொடர்பில் இலங்கை மருத்துவச் சபையினால் வழங்கப்படும் திறமை ஒழுங்கு அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அவர்கள் மருத்துவ உத்தியோகத்தர்களாக ஆரம்பத் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படுவார்கள்.*

*மேற்குறித்த திருத்தங்கள் 2019.07.31 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.*

EOG 12-0341

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*